எண்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

   (i) மிகச் சிறிய இயல் எண்ணிற்கும் மிகச் சிறிய முழு எண்ணிற்கும் இடையே உள்ள வித்தியாசம் _____

   (ii) 17 x _____ = 34 x 17

   (iii) ஓர் எண்ணுடன் _____ ஐக் கூட்டும்போது, அந்த எண் மாறாமல் இருக்கும்.

   (iv) _____ ஆல் வகுப்பது என்பது வரையறுக்கப்படவில்லை.

   (v) ஓர் எண்ணை _____ ஆல் பெருக்கும்போது அந்த எண் மாறாமல் இருக்கும்.

2. சரியா தவறா எனக் கூறுக.

   (i) முழு எண்களின் பெருக்கல் சமனி பூச்சியம் ஆகும்.

   (ii) இரு முழு எண்களின் கூடுதல் அதன் பெருக்குத் தொகையை விடக் குறைவானதாக இருக்கும்.

   (iii) முழு எண்களில் கூட்டல் மற்றும் பெருக்கல் ஆகியவை சேர்ப்புப் பண்புடையவை.

   (iv) முழு எண்களில் கூட்டல் மற்றும் பெருக்கல் ஆகியவை பரிமாற்றுப் பண்புடையவை.

   (v) முழு எண்களில் கூட்டலின் மீதான பெருக்கல் பங்கீட்டுப் பண்புடையது.

LIVEWORKSHEETS